தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 28, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021,

1990 ஏப்ரல் 11, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடி மகன் அவர்கள் தலைமையில் காலை 9–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை."

பிற்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாமல் தொடர்ந்து அறம் செய்ய வேண்டும். அதுவே அழியும் காலத்தில் அழியாத் துணையாக நிற்கவல்லதாகும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

கள்ளர் நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

*731. திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலம் கள்ளர் நடு நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

புதிய காவல் நிலையங்கள்

*2212. திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாநகரின் எல்லைப் பகுதியில் பெருகிவரும் புறநகர்களின் தேவையைக் கருதியும் மக்கள் தொகை பெருக்கத் தினை உத்தேசித்தும் புதிய காவல் நிலையங்கள் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?